DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU</u>

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 34 of 2024 PW :2

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. மீனா

Husband's Name : திரு. லோகேஷ்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 30

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.01.2026.

**தேதி..27.01.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 34/2024, அ.த.சா.2 திருமதி.மீனா , க/பெ. லோகேஷ் வயது 30 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செயய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

1. நான் வடகுப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 26/11/2023 ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு ஜீவரத்தினம் பாட்டி வீட்டிற்கு பக்கத்தில் நான் குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி எலும்மிச்சை செடியை வெட்டிவிட்டார். அதை ஜீவரத்தினம்மாள் கேட்டதற்கு எதிரி தேவிடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். பாட்டி வீட்டிற்குள் சென்ற போது ஆஜர் எதிரியும் வீட்டினுள் சென்று பாட்டியின் கழுத்தை பிடித்து அடித்து கீழே தள்ளினார். நான் ஓடி சென்று பார்த்த போது அவர் கழுத்தின் மீது அடித்து கீழே தள்ளினார் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி குறுக்கு விசாரணை**

ஜீவரத்தினம் பாட்டியின் கழுத்தை எதிரி எங்கு பிடித்தார் என்றால் வீட்டிற்கு உள்ளே. நான் எனது வாக்குமூலத்தில் உள்ளே இருந்ததை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எதிரி பேசிய கெட்ட வார்த்தையை நான் எனது வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருந்ததாக நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் அதை நான் போலீஸ் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது பாட்டி கனவரை இழுந்து தனியாக தான் வாழந்து வருகிறார் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் போது உடன் சென்றேனா என்றால் இல்லை. போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தனர் என்றால் 27/11/2024 அன்றே விசாரணை செய்தனர். எனது கனவருக்கும் எதிரிக்கு நிலதகராறு உள்ளதா என்றால் இப்போது இல்லை.

என்னை தவர சம்பவம் நடந்த இடத்தில் வேறு யாராவது இருந்தார்களா அவர்களின் பெயர்கள் குறித்த விவரத்தை நான் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். கன்னப்ப ரெட்டி மற்றும் நானும் தான் சம்பவயிடத்தில் இருந்தோம். வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எதிரியின் வீடு எங்கு உள்ளது என்றால் எங்கள் வீட்டில் எதிரில் உள்ளது. சம்பவம் நடைபெற்ற பிறகு பாட்டிக்கு காயம் ஏதாவது ஏற்பட்டதா என்றால் காயம் எதுவும் ஏற்படவில்லை களைப்பினால் மருத்துவமனைக்கு சென்றார். பாட்டியுடன் நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. பாட்டியை யார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றால் அவரின் பேரன். சம்பவம் நடந்த பிறகு எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் படித்து காண்பித்தார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. என்னை விசாரணை செய்த அதிகாரியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. பாட்டியின் என்னுடைய உறவினாரா என்றால் இல்லை. நான் எனது முதல் விசாரணையில் கூறியதை நான் போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் இல்லை. எனது கனவருக்கும் எதிரிக்கும் நிலத்தகராறு பிரச்சனை உள்ளது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒப்பம் /– A. தரணிதரன்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்

பள்ளிப்பட்டு